**கோயமுத்தூர் முதன்மை மாவட்ட நீதிமன்றம், கோயமுத்தூர்**

**UAPA.No.128/2023**

PW - 1

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 3 ஆம் நாள் செவ்வாய்கிழமை அன்று திருமதி ஜி.விஜயா, B.A.,M.L., PGDCFS முதன்மை மாவட்ட நீதிபதி, கோயமுத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | சாஜஹான் |
| தந்தை பெயர் | யூசப் |
| வயது | |
| முகவரி | |

**முதல் விசாரணை**

நான் அசல் மனுவில் மனுதாரர் ஆவேன். ம.சா.1 ஆக எனது தரப்பு சாட்சியத்தை நான் சத்தியப்பிரமாணமாகத் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேலும் எனது சாட்சியத்தை உறுதிபடுத்துவதற்காக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 13-10-2022 தேதியிட்ட 1 ஆம் எதிர்மனுதாரர் பிறப்பித்த உத்திரவின் நகல் ம.த.சா.ஆ.1.
2. 19-08-2015 தேதியிட்ட எனது பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் எஸ்.ஆர்.ஓ. நகல் ம.த.சா.ஆ.2.
3. எனது ஆதார் அடையாள அட்டையின் புகைப்பட நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு ம.த.சா.ஆ.3,

**குறுக்கு விசாரணை**

எனக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் எழுத படிக்க தெரியாது. எனது மனுவானது ஆங்கிலத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலம் தமிழில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனு சொத்தை பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்பிற்கு கொரோனா இருந்த காலத்தில் வாடகைக்கு விட்டேன். குறிப்பாக 2020 ல் வாடகைக்கு விட்டிருக்கலாம். நான் அந்த

சமயத்தில் கல்பில் இருந்தேன். எனது சித்தி மகன் அபுதான் மனு சொத்தை கவனித்து வந்தார். அவர்தான் வாடகைக்கும் விட்டிருந்தார். நான் கோவையில் வசித்து வரவில்லை. நான் கேரளாவில் வசித்து வருகிறேன். மனு சொத்தானது 948 சதுரடி என்று சொன்னால் சரிதான். வாடகைக்கு விட்ட சமயத்தில் சுமார் மூன்று மாதங்கள் வாடகை கொடுத்தார்கள். அதன்பின் வாடகை எதுவும் கொடுக்கவில்லை. பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்பு வாடகை கொடுக்கவில்லை என்று நான் நடவடிக்கைஎதுவும் எடுக்கவில்லை. காரணம் நான் அப்பொழுது இந்தியாவில் இல்லாததால் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆரம்பத்தில் மூன்று மாதத்தில் எவ்வளவு மாத வாடகை பெற்றேன் என்ற விவரத்தை மனுவில் குறிப்பிடவில்லை. பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா ஒரு தடை செய்யப்பட்ட இயக்கம் என்று எனக்கு சீல் வைத்த பின்னர் தெரியும். நான் கூறுவது தவறு என்றும், அது தடை செய்யப்பட்ட அமைப்பு என்று எனக்கு முன்னரே தெரிந்த காரணத்தினால்தான் வாடகை எதுவும் பெற்றுக் கொள்ளாமல் மூன்று வருடங்கள் அந்த அமைப்பு எனது சொத்தில் இயங்கி வந்தது என்று சொன்னால் சரியல்ல. நான் தற்பொழுது கேரளாவில் விவசாயம் செய்து வருகிறேன். கொரோனா காலத்தில்மனு சொத்தை கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஒரு முகாம் நடத்தவேண்டுமென்று இடம் வேண்டும் என்று கேட்டதால் அந்த இடத்தை மேற்சொன்ன அமைப்பிற்கு நான் கொடுத்தேன். அனால் நான் வாடகை எதுவும் கேட்கவில்லை. ஆனால் அவ்வாறான காரணத்திற்காகத்தான் நான் கொடுத்தேன் என்று காட்டுவதற்கு ஆவண ஆதாரம் எதுவும் இல்லை. கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் அந்த முகாமிற்கு வந்து சென்றார்கள் என்ற விவரங்களையும், வருகை பதிவேடுகளையும் நான் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். கொரோனா முகாம் அங்கு நடத்துவதற்கு அரசிடம் எந்த அனுமதி பெற்று அங்கு நடத்தவில்லை என்று சொன்னால் அதை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. எனது தம்பியைதான் கேட்கவேண்டும். கொரோனா காலத்தில் பொது மக்கள் வெளியில் நடமாட தடை விதிக்கப்பட்டிருந்தது என்று சொன்னால் சரிதான். பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா என்ற அமைப்பு அகில இந்திய அளவில் செயல்படும் ஒரு அமைப்பு என்று சொன்னால் சரிதான். அந்த அமைப்பு தடை செய்யப்பட்டது என்று அறிவிப்பை போலீசார் ஒட்டி இருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். 5 ஆம் எதிர்மனுதாரர்தான் மனு சொத்தை எனது சார்பாக பார்த்து வந்தார். மனு சொத்தானது இரண்டு தளமாக உள்ளது. ஆரம்பத்தில் கீழ் தளத்தில் பேக்கரியும், மேல் தளத்தில் 5 ஆம் எதிர்மனுதாரரும், அபுவும் தங்கியிருந்தார்கள். அதனால் 5 ஆம் எதிர்மனுதாரர்தான் சொத்தை பார்த்து வந்தார். எனது மனுவில் பத்தி 2 ல் பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா இயக்கத்தை 5 ஆம் எதிர்மனுதாரர் நடத்தி வந்ததாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதேபோன்று எனது முதல் விசாரணையிலும் பத்தி 3 ல் பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா என்ற சமூக அமைப்பிற்கு 5 ஆம் எதிர்மனுதாரர் கேட்டுக் கொண்டதற்கிணங்க கோவிட் மறுவாழ்வு மற்றும் உயிர் காக்கும் பணிக்காக கொடுக்கப்பட்டது என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அவர் தடை செய்யப்பட்ட இயக்கத்தில் இருந்தாரா, இல்லையா என்று எனக்கு நேரடியாக தெரியாது. நான் முதல் சாட்சியத்தில் கூறியதுபோல் பராமரிப்பு தொகையாக எவ்வளவு பெற்றேன் என்று நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். நான் கூறுவது தவறு என்றும், அது தடை செய்யப்பட்ட இயக்கம் என்று தெரிந்தே அந்த இயக்கத்திற்கு வாடகை எதுவும் பெற்று கொள்ளாமல் விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. மனு

சொத்தை போலீசார் பார்வையிட்ட சமயத்தில் மனு சொத்திலிருந்து 96 பொருட்களை போலீசார் கைப்பற்றினார்கள் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு பொருட்கள் கைப்பற்றிய ஆவணத்தில் 5 ஆம்எதிர்மனுதாரர் அன்வர்கான் கையொப்பம் செய்துள்ளார் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது, அவருடைய கையொப்பமும் தெரியாது. அந்த சமயத்தில் நான் இந்தியாவில் இல்லை. மனு சொத்தில் பொருட்கள் கைப்பற்றிய ஆவணத்தில் 6 வது சாட்சியாக கையொப்பம் செய்த சி.பி.இப்ராஹிம்மை யார் என்றே எனக்கு தெரியாது. மேற்சொன்ன சி.பி. இப்ராஹிம் கோயமுத்தூர் பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்பின் முன்னால் உறுப்பினரும், கோயமுத்தூர் சிட்டி கம்யூனிட்டி செண்டரின் பொறுப்பாளராகவும் இருந்தார் என்று சொன்னால் எனக்கு அதை பற்றி தெரியாது. மனு சொத்தானது நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த பகுதியானது அதிக மக்கள் தொகை கொண்ட பகுதியும், போக்குவரத்து வசதி கொண்ட பகுதி என்று சொன்னால் சரிதான். மனுவில் மனு சொத்தானது இரண்டு தளமாக உள்ளது என்ற விவரத்தை நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். அதேபோன்று மனு சொத்தானது கூட்டு குடும்ப சொத்து என்று நான் எதுவும் குறிப்பிடவில்லை. பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்பானது Society Registration Act ன்படி பதிவு செய்யப்பட்ட ஒரு இயக்கம் என்று மனுவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். பதிவு செய்யப்பட்ட ஒரு இயக்கத்திற்கு வாடகைக்கு விடும்பொழுது ரசீது வழங்கவேண்டுமென்பது விதிமுறை என்று சொன்னால் சரிதான். ஆனால் கொரோனாவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்கள் கேட்டதால் வாடகை

எதுவும் நான் பெற்று கொள்ளவில்லை. பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்பு சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபட்ட காரணத்தினால்தான் மத்திய அரசு அதை தடை செய்தது என்று சொன்னால் சரிதான். அதனால் மத்திய அரசை இந்த மனுவில் சேர்க்காததால் மனு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தடை செய்யப்பட்ட இயக்கம் என்பதால் மாநில அரசால் வைக்கப்பட்ட சீலை அகற்ற வேண்டிய அவசியமில்லை என்று சொன்னால் சரியல்ல. கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அங்கு முகாம் நடத்தப்பட்டது என்று கூறுவதற்கு எவ்வித ஆவண ஆதாரத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாத காரணத்தினால் எனது மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. மனு சொத்தில் கோவிட் முகாம் எதுவும் இயங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. மனு சொத்திலிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களை தடை செய்யப்பட்ட இயக்கத்தில் இருந்த உறுப்பினர்களின் உபயோகத்திற்காக மட்டுமே பயன்படுத்தி வந்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**( 3 முதல் 5 எதிர்மனுதாரர்களின் தரப்பில் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

sd/ சாஜஹான்,

Taken down by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.